**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலை துறை**
**வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி**
**திருநெல்வேலி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(01.03.2023 முதல் 05.03.2023)**

---

**அறிக்கை எண் 017/2023** **தேதி. 28.02.2023**

**தமிழகத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30° செ முதல் 37° செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 16° செ முதல் 26° செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19° செ முதல் 25° செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 5-9° செ ஆகவும் பதிவானது. தமிழ்நாட்டில் இந்த காலகட்டத்தில் வறண்ட வானிலையே பதிவாகியுள்ளது.

| கடந்த வார வானிலை (23.02.2023 முதல் 27.02.2023) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 05.03.2023 அன்று 08.30 மணியுடன் முடிவடையும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள் 1 23/02 | நாள் 2 24/02 | நாள் 3 25/02 | நாள் 4 26/02 | நாள் 5 27/02 | | நாள் 1 01/03 | நாள் 2 02/03 | நாள் 3 03/03 | நாள் 4 04/03 | நாள் 5 05/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 1 | 0 | 0 | 1 |
| 34 | 35 | 35 | 35 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 35 | 35 | 35 | 36 | 36 |
| 22 | 22 | 22 | 24 | 23 | குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 22 | 22 | 23 | 23 | 23 |
| 3 | 2 | 3 | 3 | 3 | மேகம் முட்டம் (ஆக்டா) | 4 | 4 | 3 | 2 | 4 |
| 73 | 69 | 69 | 69 | 65 | அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 80 | 80 | 70 | 80 |
| 44 | 48 | 46 | 50 | 44 | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 40 | 50 | 30 | 30 | 40 |
| 1 | 0 | 1 | 0 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 10 | 8 | 10 | 8 |
| 140/தென் கிழக்கு | 0/வடக்கு | 140/ தென் கிழக்கு | 0/ வட கிழக்கு | 140/ தென் கிழக்கு | காற்று விசும் திசை | 70/ கிழக்கு வட கிழக்கு | 20/ வட வட கிழக்கு | 90/ கிழக்கு | 70/ கிழக்கு வட கிழக்கு | 70/ கிழக்கு வட கிழக்கு |

**திருநெல்வேலி மாவட்டத்திற்கு எதிர்பார்க்கப்டும் வானிலை (01.03.2023 முதல் 05.03.2023)**

வரும் நாட்களிலில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு வானம் ஒருளவு மேகத்துடன் காணப்படும். நாள் 1(01.03.2023), நாள் 2(02.03.2023) மற்றும் நாள் 5(05.03.2023) ஆகிய நாட்களில் மிக லேசான மழை பெய்ய வாய்ப்பு.. அதிகபட்ச வெப்பநிலை 35-36°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 22-23°செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 30-50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. 24 மணி நேர காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்றும் காற்றின் திசை கிழக்கு, வடக்கு-வடகிழக்கு மற்றும் கிழக்கு-வடகிழக்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- கடந்த வாரம் வறண்ட வானிலையே நிலவியது. நாள் 1(01.03.2023), நாள் 2(02.03.2023) மற்றும் நாள் 5(05.03.2023) ஆகிய நாட்களில் மழை பெய்ய வாய்ப்பு. எனவே, விவசாயிகள் உள்ளூர் வானிலை பொருத்து நீர்பாசனம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- மழைக்கு பெய்ய வாய்ப்புள்ளதால் அறுவடை செய்யப்பட்ட வேளாண் பொருட்களை பாதுகாக்கவும்.
- வெப்பநிலை காரணமாக காய்கறி பயர்களில் சார் உறிஞ்சும் பூச்சி தாக்கம் அதிகரிக்க வாய்ப்பு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏக்கருக்கு 10-15 மஞ்சள் ஒட்டுப் பொறியை சார் உறிஞ்சும் பூச்சி தாக்கத்தை கண்காணிக்கவும், அசுவினி மற்றும் இலைத்துளைப்பான் கண்காணிக்க 5-10/ ஏக்கருக்கு நீல ஒட்டுப் பொறியைப் பயன்படுத்தும்மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- பருத்தியில் பருத்தி வெடிக்கும் பருவம் - தற்போதைய காலநிலை காய்ப்புழுவுக்கு சாதகமாக உள்ளது. கட்டுப்படுத்த குயினால்பாஸ் 25 இசி 2.01/எக்டர் அல்லது தியாமெதாக்சம் 25% WG 100 கிராம்/எக்டர் (அல்லது) பாசலோன் 35% இசி 200 மிலி/எக்டர் தெளிக்கவும்.
- நெல்லில் பால் பிடிக்கும் பருவம்- நிலவும் வானிலை குலை நோய்க்கு சாதகமாக உள்ளது. எனவே விவசாயிகள் அசோக்ஸிஸ்ட்ரோபின் 25SC @ 500 மிலி/எக்டர் தெளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். செம்புள்ளி நோய்க்கு சாதகமாக உள்ளது. எனவே விவசாயிகள் மேன்கோசெப் (2.0 கிராம்/லிட்டர்) 10-15 நாட்கள் இடைவெளியில் 2-3 முறை தெளிக்க வேண்டும்.
- கரும்பில் இடைக்கணுப்புழு தாக்கத்தை குறைக்க இப்பூச்சியின் முட்டைகள் இருப்பின் அவற்றை சேகரித்து அழித்து விடவும். 150 மற்றும் 210வது நாட்களில் முறையான சோகை உரித்தல் வேண்டும். அதிகபடியான தலைசத்து இடுவதை தவிர்க்கவும். டிரைகோகிரம்மா கைலோனிஸ் அட்டையை 2.5 சி.சி /எக்டர் விதம் 15நாட்களுக்கு ஒரு முறை என்றவாறு 4வது மாதத்திலிருந்து வயலில் கட்டிவிட வேண்டும்.
- அதிக காலை ஈரப்பதம் மிளகாயில் பூக்கும் முதல் காய் வளர்ச்சி பருவத்தில்- தற்போதைய வானிலை கடலைப்புழுக்கு உகந்தது @ எமாமெக்டின் பென்சோயே 5% SG@ 4 கிராம்/ 10 லிட்டர் தெளிக்கவும்.
- தென்னையில் நிலவும் வானிலையில் அனைத்து பருவம் - அனைத்து பருவம்- நிலவும் வானிலையில் ரகோஸ் ஸ்பைலிங் வெள்ளை ஈ தென்படுகிறது. எனங்கார்சியா ஒட்டுண்ணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நீர், மைதா கரைசலை தெளிப்பாக பயன்படுத்துதல். மேலும் மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து கொள்ளவும்.
- மல்லிகை -பூக்கும் பருவம்- நிலவும் வானிலை மலர் கட்டிகள் பாதிப்புக்கு ஏற்றது. தியாமெதாக்சம் 25% WG @ 75 கிராம்/லிட்டர் அல்லது நோவலூரதைன் 3 மிலி/லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவும்.
- கர்ப்பமாக இல்லாத விலங்குகளுக்கு உடல் எடையில் 5மிகி,கிலோ என்ற திரவ ஆக்ஸிகுளோக்சமைடு முலம் குடற்பழு நீக்கம் செய்யவும். பி.பி.ஆர் மற்றும் குடல் நுண்ணுயிரிவிற்கு எதிராக தடுப்பூசி போடவும்.
- கோழிக்கான கோடைக்கால பரதாமரிப்ப - இட நெரிச்சலை குறைக்கவும். காலை , மாலை (குறைந்த வெப்பம்) நேரங்களில் தீவனமளிக்க வேண்டும். கொட்டகையின் பக்கவாட்டில் ஈரமான, நனைந்து சாக்கினை தொங்கவிடவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி